செ.வெ.எண்: 65 நாள்: 30.01.2018

**புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கீரமங்களத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 463 பயனாளிகளுக்கு சுமார் ரூ.35.79 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கீரமங்களம் கிராமத்தில் வருவாய்த்துறையின் சார்பில் மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (30.01.2018) நடைபெற்றது.

தமிழக அரசு பொதுமக்களிடமிருந்து குறைகளை மனுக்களாக பெற்று தீர்வுகாணும் நோக்கத்தில் மாதந்தோறும் ஒரு கிராமத்தை தேர்வு செய்து அந்த கிராமத்திற்கு அனைத்து துறை அரசு அலுவலர்களும் நேரடியாக சென்று மாவட்ட நிர்வாகம் சார்பில் மக்கள் தொடர்பு முகாம் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஆலங்குடி வட்டம், கீரமங்களம் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமிற்காக பொது மக்களிடம் இருந்து 503 முன் மனுக்கள் பெறப்பட்டு 80 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது. 423 மனுக்கள் விசாரனையில் உள்ளது. மேலும் இன்றைய தினம் பொது மக்களிடம் இருந்து 222 மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 15 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கினார்.

இம்முகாமில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைசார்ந்த அலுவலர்கள் தங்களது துறைகளின் மூலம் நிறைவேற்றப்படும் திட்டங்கள் குறித்து திட்டவிளக்க உரையாற்றினார்கள்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.13,950 மதிப்பில் விலையில்லா சலவைப்பெட்டிகளையும், வருவாய்த்துறையின் சார்பில் 450 பயனாளிகளுக்கு ரூ.35,00,000 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் ஒரு பயனாளிக்கு மானிய விலையில் ரூ.600 மதிப்பீட்டில் கைத்தெளிப்பான் கருவியும், மூன்று பயனாளிகளுக்கு ரூ.15000 மதிப்பீட்டில் உளுந்து சாகுபடி செயல் விளக்க பயிர்களும், ஒரு பயனாளிக்கு தென்னை வளர்ச்சி வாரியம் சார்பில் 40 எண்ணிக்கையில் தென்னங்கன்றுகளும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு மானிய விலையில் தலா ரூ.6400 மதிப்பீட்டில் விளக்கு பொறிகளும், ஒரு பயனாளிக்கு ரூ.30,000 மதிப்பீட்டில் பலா - பாலூர் 1 ரக கன்றுகளும், ஒரு பயனாளிக்கு ரூ.6000 மதிப்பீட்டில் மிளகாய் குழித்தட்டு நாற்றுகளும், ஒரு பயனாளிக்கு ரூ.8000 மதிப்பீட்டில் மிளகு செடிகளும் என மொத்தம் 463 பயனாளிகளுக்கு ரூ.35,79,950 மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:

தமிழக அரசு மாவட்ட ஆட்சியரகத்தில் ஒவ்வொரு வாரமும் நடத்தப்பெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு வர முடியாத பொது மக்களின் குறைகளை தீர்வு காணும் வகையில் குக்கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் கீரமங்களத்தில் மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டுள்ளது. ஆலங்குடி பகுதிகளில் விவசாயம் சிறப்பாக நடைபெறும். வடகாடு பகுதிகளில் எழுமிச்சை சாகுபடியை கருத்தில்கொண்டு விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படவுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் மழை அளவு குறைந்த காரணத்தினால் விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்புநீர் பாசனக் கருவிகளை பயன்படுத்தி விவசாயம் செய்ய வேண்டும். இப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டால் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்திலும், பெரு

விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியத்திலும், சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்புநீர் பாசனக் கருவிகள் வழங்கப்படும். இதனை இப்பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இப்பகுதியில் உள்ள பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சென்ற ஆண்டு ஆலங்குடி சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ததைப்போல் இந்தாண்டும் நீர் உள்ள இடங்களில் அதிக ஆழத்தில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு குடிநீர் பற்றாக்குறை உள்ள பிற இடங்களுக்கு குடிநீர் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆலங்குடி சுற்றுவட்டாரப் பகுதிகளில் பழுதடைந்த மின்மாற்றிகளை விரைவில் புதிதாக மாற்றித்தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கீரமங்களம் மற்றும் ஆலங்குடி பேரூராட்சி பகுதிகளில் பழுதடைந்த சாலைகளை தமிழக அரசிடம் சிறப்பு நிதி பெற்று சாலைவசதிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இப்பகுதியில் உள்ள பர்மா காலணியில் வசிக்கும் 140 குடும்பத்தினருக்கும் உரிய ஆய்வு செய்து பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதேபோன்று குளமங்களம் மாசிமகம் திருவிழாவிற்கு உள்ளூர் விடுமுறை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, பொது சுகாதாரத்துறை, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை ஆகிய துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளில் அரசின் திட்டங்கள் குறித்த கண்காட்சியினை பார்வையிட்டார். மேலும் கீரமங்களத்தில் மரக்கன்றுகளை நட்டார்.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.சிவ.வீ.மெய்யநாதன், வேளாண்மை இணை இயக்குநர் திரு.ராஜகோபால், மாவட்ட மாற்றுதிறனாளிகள் நலஅலுவலர் திரு.சரவணக்குமார், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.ரேணுகா, வட்டாட்சியர் திருமதி.ரெத்தினாவதி, முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் திரு.துரைதனசேகரன் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**